REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 23உ திங்கள் (6—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 24உ செவ்வாய் (7—6—55) [இதழ் 304

கான்பூர் தொழிலாளர் தலைவர்கள் உண்ணாவிரதம்

தங்களை அரசியல் கைதிகளாக நடத்தக் கோரி, இரு தலைவர்கள் உட்பட பத்து தொழிலாளர்கள் செவாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தையொட்டி கைது செய்யப்பட்டவர்கள்—சிறைக்குள் உண்ணாவிரதம் துவங்கியுள்ளனர் என்று தெரிகிறது.

புன்னுவ் மாவட்ட சிறையில் உள்ள வேறு சில தொழிலாளர்களும் வரும் ஜூன் 8-ந் தேதி முதல் அதே கோரிக்கைக்காக சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக சிறையதிகாரிகளுக்கு 'கோட்டீஸ்' தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

நகர சபைத் தலைவர்கள் குமுறல்!

"கனரகத் தொழில்களில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டது ஏன்?"

"இரண்டாம் திட்டத்திலாவது தொழிற்சாலைகளை நிறுவுக!"

சென்னை மாநாட்டில் தீர்மானம்

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வட இந்தியாவிலேயே அதிகமான கனரகத் தொழில்கள் ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருக்கின்றன; தென்னாட்டில் ஏதும் செய்யப்படவில்லை.

"முதல் திட்டத்தில்தான் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு விட்டபோதிலும், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்திலேனும் கூடுமானவரை கனரகத் தொழில்களை தென்னாட்டிலேயே அமைக்க வேண்டுமென்பது எங்கள் கருத்து,"

என்று, சென்னை, ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மாநில நகர சபைத் தலைவர்கள் ஐந்தாவது மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

திருப்பூர் நகரசபைத் தலைவர் கே. என். பழனிசாமி கவுண்டர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விளம்பரம் கண்டு சீறும் 'இந்து'!

நகரசபை தேர்தல்கள் ஒத்திவைப்பு?

உள் நோக்கம் என்ன?

நகரசபைத் தலைவர் மாநாட்டில் பேசுகையில், நிதி மந்திரி சுப்பிரமணியம், எதிர்நோக்கியிருக்கும் நகரசபைத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற ஒரு யோசனையை வெளியிட்டிருக்கிறாராம்.

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக எஞ்சியுள்ள சில மாதங்களில் மிகவும் கடினமாக வேலை செய்ய வேண்டியிருக்கும்; இப்போதுள்ள நகர சபைகள், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதில் சர்க்காருக்கு குறிப்பிடத் தகுந்த உதவி புரியக் கூடியவைகளாயிருக்கமுடியும்" என்றும் அவர் தனது யோசனையை வெளியிட்டபோது குறிப்பிட்டிருக்கிறார்.

இன்று உணர்ந்திருப்பதை அன்றே உணர்ந்திருந்தால்...!

சென்னை பொதுக் கூட்டத்தில் நடராசன், சிற்றரசு முழக்கம்

"'திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களின் பேச்சைக் கேட்டிருந்தால் பார்ப்பனரல்லாத மக்கள் முன்னேறியிருக்க முடியாது; நானோ அல்லது காமராசரோ, இதர பார்ப்பனரல்லாதாரோ இன்று இந்த நிலையில் இருப்பதற்கு அந்த இயக்கங்கள் அல்ல காரணம்; எங்கள் உழைப்பால்—சொந்த முயற்சியால்தான் நாங்கள் உயர்ந்திருக்கிறோம்; அந்த இயக்கங்கள் பார்ப்பனரல்லாத மக்களுக்கு நன்மை செய்வதற்கு மாறாக, துவேஷ மூட்டிவிட்டு, முன்னேற முடியாமல் செய்கின்றன,' என்று கோவையில் சுப்பிரமணியம் பேசியதாக பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன்; இன்று அவர் மட்டுமல்ல—அவரைப்போன்ற இதர பார்ப்பனரல்லாத மக்களும், ஓரளவு உயர்ந்த பதவிகளும், உத்தியோகங்களும் வகிக்கிறார்கள் என்றால், அது பார்ப்பனரல்லாத மக்களுக்கு

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

ஒரு குடும்பத்தினரின் சோக முடிவு

12 வயதுச் சிறுமியை தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிய நிலை

கட்டாக், ஜூன் 4—

ஒரு பன்னிரெண்டு வயதுச் சிறுமி தனது குடும்பத்திற்கு ஏற்பட்ட பரிதாப முடிவின் விளைவாக தற்கொலை செய்துகொள்ள முயன்றபோது, அந்த கிராம மக்கள் அவளைக் காப்பாற்றியதாகத் தெரிகிறது.

அந்தச் சிறுமியின் இரண்டு சகோதரர்களும் மகாநதியில் குளித்துக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கியதாகவும், அவர்களைக் காப்பாற்றச் சென்ற அவர்களின் தந்தையும் நீரில் மூழ்கி இறந்துபட்டதாகவும், இந்தச் சோகச் செய்தியறிந்த அந்தச் சிறுமியின் தாயார் துயர் தாளாது தூக்கிட்டு மாண்டதாகவும், குடும்பம் குலைந்து, சிறுமி நிர்க்கதியாக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

தி.மு. கழகப் பொதுச்செயலாளருக்கு தூத்துக்குடி தந்த வரவேற்பு

நகரின் வரலாறுகாணா மகத்தான காட்சி

29—5—55 ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு 'நெல்லை எக்ஸ்பிரசி'ல் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தார். புகைவண்டி நிலையத்தில் அதிர்வேட்டுக்கள் முழங்க, பலவித வாத்தியங்கள் இன்னிசை முழங்க, இலட்சிய ஒலிகளை 5000-க்கு மேற்பட்ட தோழர்கள் முழங்க, இருபதுக்கு மேற்பட்ட தி. மு. கழகச் செயலாளர்கள் மாலை அணிவித்து வரவேற்க, தோழர்கள் எம். எஸ். சிவசாமி, கே. வி. கே. சாமி ஆகியவர்கள் பொதுச் செயலாளரை வரவேற்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

(4-ம் பக்கம் பார்க்கவும்)

இந்தியா—ரஷ்யா ரேடியோ டெலிபோன்

புதுடில்லி, ஜூன் 6—

இந்தியாவிற்கும்-சோவியத் ரஷ்யாவிற்குமிடையே நேரடி ரேடியோ டெலிபோன் இணைப்பு ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது.

பூதான முயற்சி தோற்றால்...!

'1957-ல் நாடு முழுவதும் போராட்டம் நடத்துவராம்'

ஆச்சாரியா விநோபா பாவேயின் கருத்து

தாங்களாகவே முன்வந்து பூதான இயக்கத்திற்கு நிலம் தர வேண்டும் என்பதற்காக, பூதான இயக்கத்தவர் மேற்கொண்டு வரும் முயற்சிகள் தோல்வியுறுமானால், அவர்கள் 1957-ம் ஆண்டு நாடெங்கணும் ஒரு அறப்போரில் ஈடுபட வேண்டியிருக்குமென பூதான ஊழியர்களுக்கு ஆச்சாரியா விநோபா பாவே கூறியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த நிலை உருவாகாமல் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான், பெர்காம்பூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகக் குழுக் கூட்டத்திற்கு விநோபா பாவே அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

'பூதான யக்ஞத்'திற்கென நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலட்சிய எல்லை சுமார் 5 கோடி ஏக்கர் நிலமாகும். நாட்டில் உள்ளதெனக் கணக்கிடப்பட்டிருக்கும் சுமார் 30 கோடி ஏக்கர் நிலத்தில் ஆறில் ஒரு பங்கான இந்த நிலம், நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குத் தரப்பட முடியும் என்றும், ஆனால் பூதான இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகியும் இலட்சிய எல்லையை இன்னும் அடையவில்லை என்றும், இதுவரை சுமார் 40 லட்சம் ஏக்கர் நிலமே பெறப்பட்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

நீர் மின்சாரத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு, அப்பகுதியின் நிலைமைகளுக்கு ஏற்ப, உற்பத்தி சக்தியில் கிலோவாட் ஒன்றுக்கு, ஆயிரம் ரூபாயிலிருந்து மூவாயிரம் ரூபாய் வரை செலவாகிறது.

'பிரதமரே! பதவியிலிருந்து விலகுக'

கூக்குரல் எழுப்ப முயன்ற இந்து மத வெறியர் கைது!

பசுவதையைத் தடுக்க வேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுக்கும் பிரதமர் பண்டித நேருவுக்கு தாங்கள் கருப்புக் கொடி காட்டப்போவதாக அறிவித்திருந்த அகில இந்திய இந்து ராஜ் கட்சியின் செயலாளரான எல். ஜி. தாட்டே என்பாரை பம்பாய் போலீசார், கைது செய்து காவலில் வைத்திருந்து, பிரதமர் நேரு ரஷ்யா புறப்பட்டபின் விடுதலை செய்தனர் என்று தெரிகிறது.

பசுவதையைத் தடுக்க மறுப்பதாலும், தொடர்ந்து தற்கொலைக்கொப்பான ஒரு வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதாலும், பிரதமர் நேரு தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோருவதற்காகவே விமான நிலையத்தில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக தாட்டே அறிவித்திருந்தாராம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—15/55

மாநில மாநாட்டு நிதி

★

முன்பணமாக மாநில மாநாட்டிற்குத் தேவைப்படும் நிதி ரூ. 25,000 பொதுக் குழுத் தீர்மானப்படி, மாவட்ட தி. மு. கழகங்கள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகத் திரட்ட முற்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவில் மாநில மாநாடு நடைபெற வழி ஏற்படும்.

நிதி தலைமைக் கழகத்துக்கு வந்து சேர்ந்த பிறகுதான் மாநில மாநாட்டிற்கான நாள் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொதுக் குழுக் கூட்டத்தில் தங்கள் தங்கள் மாவட்டப் பங்காக வாக்களித்த தொகையை, ஜூன் திங்கள் 20-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆங்காங்குள்ள சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைக் கழகத்தாரும், கழகப் பற்றுடையோரும் மாநில மாநாட்டு நிதியை வெற்றிகரமாக விரைவில் திரட்டி, மாவட்டச் செயலாளர்களுக்கு உதவியாகப் பணி புரியும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

மாநில மாநாட்டு வரவேற்புக் கட்டணத் தொகை ரூ. 10 செலுத்தாத பொதுக் குழு உறுப்பினர்கள் உடனடியாகச் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

மாநில மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினராக விரும்பும் பொதுக் குழு உறுப்பினரல்லாத கழக உறுப்பினர்கள் ரூ. 25 தலைமைக் கழகத்துக்கு அனுப்பிப் பதிவு செய்துகொள்ளலாம்.

"அறிவகம்" சென்னை
6—6—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—6—'55 திங்கள்

விரைவாக்குவோம்!

தண்ணொளியால் மண்ணுலகை மகிழ்விக்கும் விண்ணுலக வெண்ணிலவு—மாயம்!

பாருக்கு வாழ்வு தரும் பகலவன்—மாயம்!

சந்தனக் காட்டைக் கடந்து குளிரும், மணமும் பரப்பி மனதை மகிழ்ச்சிப்பெருக்கில் நனைக்கிறதே தென்றல்—அது மாயம்!

பொன்னும், பொருளும் பொதிந்து கிடக்கிறதே பூமி—அது மாயம்!

கண்ணுக்கெதிரே காட்சி தரும் கடல்—மாயம்!

மாமருந்தும், தேன் விருந்தும் தரும் மாமலை—மாயம்!

துப்பார்க்குத் துப்பாகும் தூய நீரோடை—மாயம்!

இயற்கை அன்னை உலகில் அள்ளித் தெளித்திருக்கும் அழகுக் கோலங்கள் அத்தனையும் மாயம்!—அவை மட்டுமா? பெற்றோர், உற்றோர், உறவினர் மாயம்! தன் காயமே பொய்! காதலித்துக் கைப்பிடித்த இல்லாளுடன் சுவைத்து அனுபவித்துப் பெற்ற இல்லற இன்பத்தின் இணையில்லா உரு—குறுநகை பூக்கும், செரு பகை போக்கும் செல்வம் — அது மாயம்!

சுருங்கக் கூறின், 'உலகே மாயம்; வாழ்வே மாயம்!—வாழ்வில் நாம் காணும் சுகமே மாயம்!' என்றெண்ணிக்கிடக்கும் இந்நாட்டு மக்கள், 'வாழ்க்கை வாழ்வதற்கே,' என்ற அரிச்சுவடியும் அறியாதவராகக் கிடக்கின்றனர்.

'வாழத்தான் பிறந்தோம்! வாழ்க்கை என்பது, நம்மால் தேடிப் பெற்று, சுவைத்து அனுபவிக்க வேண்டிய ஒன்று; வாழ்க்கை—துன்பங்களின் சேர்க்கை அல்ல—இன்பங்களின் இருப்பிடம்.

'வாழ வேண்டும்' என்று எண்ணங்கொண்டோர் இன்று, மனித வாழ்க்கையில் குறுக்கிடும் துன்பங்களைக் குறைத்து இன்பங்களை அதிகரிக்கும் நற்பணியில் தமது பொற்காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

"அவர்களின் பணி, மன்பதையின் வாழ்வை பொன்னாக்கித் தந்திருக்கிறது; 'வாழ்க்கை துன்பக் கேணியாகவன்றோ காட்சி தருகிறது' என்று வாடி கிடக்கும் நாம், இன்பங்களைத் தேடிச் சென்றால்—உலகத்தாரோடு ஒட்டி ஓடினால், 'இன்பக் கடலாம் வாழ்க்கை' என்பதை உணர முடியும்—அனுபவிக்க முடியும்" என்ற கருத்தினை இந்த நாட்டு மக்கள் அறிந்திருக்கவில்லை; 'வாழ வேண்டும்' என்ற எண்ணமே அவர்களுக்கில்லையே! 'வாழ்க்கை நமக்குத்தான்' என்ற எண்ணம்--வாழ்க்கையில் பற்றும், பாசமும் ஒரு 'பிடி'ப்பும் ஏற்பட்டால் அல்லவா தோன்ற முடியும்? மக்கள்தான், 'வாழ்வே மாயம்' என்ற தத்துவத்தில் மூழ்கிக் கிடக்கின்றனரே! அந்த மௌடீகத்திலிருந்து மக்கள் விடுபட்டால்தானே—'நம்மால் ஏன் வாழமுடியவில்லை? நம் வாழ்வை தட்டிப்பறிப்பவர் யார்? பெருவாரியான நாம் மட்டும் துன்பக் கேணியில் தத்தளிக்கவும், ஒரு சிலர் மட்டும் இன்பக் கடலில் நீந்தவுமான நிலை ஏன்?' —என்ற கேள்விகள் பிறக்கும்! வாழ்வைப் பறிகொடுத்து நிற்கும் மக்களுக்கு வாழ வழி காட்டுவோர், 'இப்படிப்பட்ட வாழ்வை உங்களுக்குத் தருவோம்' என்று விளக்கம் தருமுன்னால், 'அந்த வாழ்க்கையில் அவர்களுக்கு நம்பிக்கையும், பற்றும் பிடிப்பும் ஏற்படச் செய்ய வேண்டாமா,' என்ற கேள்விக்கு விடைபகர விரும்புவோர்தான், தி. மு. கழகத்தின் சமுதாயத்துறைக் கொள்கையைப் புரிந்துகொள்வது சாத்தியமாக இருக்க முடியும்.

இந்த நாட்டு மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கு வழி காட்ட விரும்பும் எவரும்' எந்த மக்களின் வாழ்க்கைக்கு வழி காட்டப் போவதாகக் கூறுகிறார்களோ அந்த மக்கள், தாங்கள் காட்டப் போவதாகக் கூறும் வழியைப் பற்றிக்கூட அல்ல—தாங்கள் எதற்கு வழி காட்டுகிறார்களோ, அந்த வாழ்க்கையைப் பற்றி இறந்த காலத்திலும், நிகழ் காலத்திலும் கொண்டிருந்த— கொண்டிருக்கிற கருத்துக்களை ஆராய்ந்து பார்க்கத் தவறுவார்களேயானால், அவர்கள் விருப்பம் எக்காலத்திலும் ஈடேற முடியாதென்பதை மனித சமூக வளர்ச்சியின் வரலாறு திட்டமாகக் கூறிக்கொண்டிருக்கிறது.

மக்கள் இன்று வாழ்க்கையில் பற்றற்று, 'என் செய்வது? எல்லாம் அவன் செயல்; பூர்வ ஜென்ம பாபம்; தலையெழுத்து,' என்று, தான் அனுபவிக்கும் இன்னல்களுக்கு, தானே சமாதானம் கூறிக் கொள்ளும் நிலையில் அவர்களை ஆக்கிவைத்திருப்பது — 'இந்த உலகத்தை நம்பாதே! நீ நம்ப வேண்டிய வேறொரு உலகம் இருக்கிறது; இந்த உலக வாழ்க்கை அநித்தியமானது; அந்த உலக வாழ்க்கை நித்தியமானது; இந்த வாழ்க்கையில் நீ பெறும் இன்பங்கள் நீர்க்குமிழி போன்றவை; அந்த மேலுலக வாழ்வில் நீ பெறும் இன்பம் என்றென்றும் நிலைத்து நிற்பது; எனவே, மனமே இவ்வுலகைவிட்டு அவ்வுலகு செல்ல நாடுவாய்! ஈசன் புகழ் பாடுவாய்! அவன் நாமம் பஜிக்கும் எங்களை தேடுவாய்!' —என்ற தத்துவங்கள்தாம்!

திராவிடர்கள் நிரந்தரமான விடுதலையோடு கூடிய செம்மையான வாழ்க்கை பெற வேண்டும் என்பதற்காகப் பணிபுரியும் தி. மு. கழகம், மக்கள் தன்னறிவுகொண்டு சிந்தித்து, தன்னாற்றல் கொண்டு வாழ முற்பட வேண்டும் என்பதற்கு, அவர்களின் மனதில் குடி புகுந்து 'குடி கெடுக்கும்' பழமை நெடி வீசும் அந்த மதத் தத்துவங்களை அகற்ற வேண்டும் என்று எடுத்தியம்பி வருவதுடன், மதத் தத்துவ போதகர்களும், 'காலமாற்றத்தைக் கவனிக்க வேண்டும்' என்று இடித்துரைத்து வருகிறது.

அந்த இடித்துரையும், எடுத்தியம்பலும், இந்த நாட்டில் குறிப்பிடக்கூடிய பலனைத் தராமல் இல்லை.

வடநாட்டில் ஜெபமாலையும் கையுமாக, தூய வெண்ணீறும் நெற்றியுமாக, காவியும் உடலுமாகக் காட்சி தரும் ஆசிரமத்து சாதுக்கள், காவி களைந்துவிட்டு, ஜெபமாலை உருட்டும் கரங்களில் மண்வெட்டியும், கலப்பையும் தூக்கி, நெற்றி நீறு வியர்வையால் அழிந்துபட பாடுபட்டு—நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபட முடியுமா என்பதை விவாதிக்க மாநாடு கூட்டி முடிவு செய்யப் போகிறார்களாம் — செய்தி கிடைத்திருக்கிறது அப்படி! 'மேலுலக நாட்டம்' கொண்ட அவர்கள், 'இவ்வுலக எண்ணம் கொண்டதே பெரும் பாக்கியம்' என்றெண்ணக்கூடும் பக்த கோடிகள்!

அது எவ்வாறாயினும், 'கால மாற்றம்' அவர்களையும், இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஒருநாள் மாற்றியேதீரும். அந்த மாற்றம் விரைவாக நிகழச் செய்ய வேண்டியதே நம் பணியின் ஒரு பகுதி!

மாலடோவ் விலகுகிறார்?

வயதாகிவிட்டதே காரணமாம்!

சோவியத் ரஷ்யாவின் வெளிநாட்டிலாகா அமைச்சர் வியாஷெஸ்லாவ் மாலடோவ், தனது பதவியைத் துறந்துவிட முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அவரது பதவியில், இப்போது முதல் உதவி வெளிநாட்டு மந்திரியாயிருக்கும் குரோமிகாவ் நியமிக்கப்பட மாட்டார் என்றும், சோவியத் கம்யூனிஸ்டு கட்சி இதழின் பிரதம ஆசிரியரான ஷெபிலாவ் நியமிக்கப்படலாம் என்றும் பெல்கிரேடிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாலடோவ், இப்போது 67 வயதைத் தாண்டிவிட்டதாகவும் அவரது உடல்நிலை தொடர்ந்து அவர் பதவி வகிக்க இயலாதிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஸ்டாலின் மரணத்திற்குப் பிறகு பதவிக்கு வந்த மூவரில், முதன் முதலாக லெவ்ராண்டி பெரியா வீழ்த்தப்பட்டதும், மாலங்கோவ் இரண்டாவதாக பிரதமர் பதவியை இழந்ததும், மூன்றாவதாக மாலடோவ் பதவியிலிருந்து விலகுவதும், மேலை நாட்டினருக்கு, வெறும் வாய்க்கு மெல்லுவதற்கு அவல் கிடைத்தது போலிருப்பதாக வர்ணிக்கப்படுகிறதாம்!

அண்மையில் வியன்னாவில் நடைபெற்ற நான்கு வல்லரசுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மாநாட்டின்போது, "நமக்கெல்லாம் வயதாகிவிடவில்லையா? நாம் இளைஞர்களுக்கு இடம் தர வேண்டாமா?" என்று, மாலடோவ் பேசியதைக் குறிப்பிட்டு, லண்டன், அவர் விலகிக்கொள்வதைக் கேட்டு ஆச்சரியப்படவில்லை என்று கூறப்படுகிறது.

சமூகசேவைப் பயிற்சி:

அமெரிக்கா அளிக்கும் உதவி

நியூயார்க், ஜூன் 4—

சமூக சேவை பற்றிய பாடசாலையில் படிப்பதற்கு இந்தியா, பாகிஸ்தான், எகிப்து இவற்றைச் சேர்ந்த பத்துப் பேருக்கு 'ஸ்காலர்ஷிப்' வழங்கப்பட்டிருக்கிறது. சமூக நலத் திட்டங்களுக்குக் கையாள வேண்டிய புதிய முறைகளை அவர்கள் படிப்பார்கள்.

இரண்டு ஆண்டுப் பயிற்சி அது; செப்டம்பர் மாதத்தில் படிப்புத் தொடங்கும் ஒவ்வொரு மாணவருக்கும் 5,000 டாலர் உதவி அளிக்கப்படும்.

பெப்சு மாநிலத்தில் வரி கொடா இயக்கம்

கம்யூனிஸ்டு விவசாயிகள் சங்கம் முடிவு

புது வரி விதிப்பின் விளைவு!

பாட்டியாலா, ஜூன் 4—

பெப்சு மாநிலத்தில் விதிக்கப்படும் புதிய வரிகளை—குறிப்பாக, அபிவிருத்திக் கட்டணத்தை எதிர்த்து, மாநிலமெங்கும் வரி கொடா இயக்கம் நடத்துவதென கம்யூனிஸ்டு விவசாயிகள் சங்கம் முடிவெடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

வரும் ஆகஸ்டு மாதத்தில் பாட்டியாலாவில் சகல கட்சிகளடங்கிய மாநாடு ஒன்று கூட்டி, மாநிலமெங்கும் வரி கொடா இயக்கம் நடத்துவது பற்றி திட்டம் வகுப்பது என, பெப்சு கம்யூனிஸ்டு விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகக் குழு தீர்மானித்திருக்கிறதாம்.

செப்டம்பர் மாதம் முதல் தேதியை, வரி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடுவதென்றும், அன்று ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்துவதென்றும், புதிய வரி விதிப்பு பற்றி மக்களின் கருத்தைத் திரட்ட சங்கத்தின் மாவட்டக் கிளைகள் வேலையில் ஈடுபட வேண்டும் என்றும் நிர்வாகக் குழுவின் மற்றொரு தீர்மானம் கூறுகிறது.

பெப்சு மாநிலத்தில் உள்ள நிலப்பிரபுக்கள் சர்க்காரின் துணையுடன் விவசாயிகளை ஏராளமான அளவில் நிலத்திலிருந்து வெளியேற்றி வருவது குறித்து நிர்வாகக் குழு வருந்துவதாயும், விவசாயிகள் வெளியேற்றப்பட முயற்சிக்கப்படும்போது, அமைதியாக வெளியேற மறுக்கவேண்டும் என்றும், எந்த விதத்திலும் நிலத்திலிருந்து வெளியேறாது பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் மற்றுமொரு தீர்மானம் தெரிவிக்கிறது.

சாவதற்காகவே வாழ்ந்தவர்?

மெக்சிகோ, ஜூன் 4—

மருத்துவமனையிலிருந்து 'குணப்படுத்தப்பட்டுவிட்டார்,' என்று வெளியே அனுப்பப்பட்ட ஒருவர், மருத்துவ மனையிலிருந்து 50 கெஜ தூரம் நடந்து சென்றதும், அங்கிருந்த சாவு எடுக்கும் சாவடி ஒன்றில் உட்கார்ந்தார்; அந்த இடத்திலேயே, சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் ஆவி பிரிந்தது!

சூதாட்டங்களுக்கு இலங்கையில் தடை!

மதுவிலக்கை அமுல் நடத்த முடிவு?

இலங்கையில், மதுவிலக்கை அமுல் நடத்தவும், குதிரைப் பந்தயம் உள்பட எல்லாவித சூதாட்டத்திற்கும் தடை விதிக்கவும் வழி முறைகள் கூற இலங்கை சர்க்கார், குழு ஒன்றை நியமிக்க முடிவு செய்துள்ளனராம்.

மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்டால் சர்க்காருக்கு ஆண்டுக்கு ரூ. 10 கோடி வருமானம் குறையுமென்று மதிப்பிடப்படுகிறதாம்.

தாக்குதலுக்கு அஞ்சி!

பாதுகாப்புக்கான இடந் தேடிச் செல்லுகிறது பார்மோசா சர்க்கார்

மக்கள் சீனு விமானத் தாக்குதல் நடத்துமென எதிர்பார்த்து, பார்மோசா சர்க்கார், பாதுகாப்பு ஏற்பாடாகத் தீவின் மத்திய பாகத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறதாம்!

மூன்றில் ஒரு பங்கு சர்க்கார் சிப்பந்திகள், சுற்றுப்புற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூ. 1,620 கோடி உதவி

கம்யூனிஸ்டுகள் செல்வாக்கு வளருவதைத் தடுக்கவாம்!

உலகின் பல பகுதிகளில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு பரவுவதைத் தடுக்க அந்நிய நாடுகளுக்கு உதவ வேண்டுமெனத் திட்டமிட்டு அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் கொண்டுவந்த 304·8 கோடி டாலர் (ரூ. 1,620 கோடி) உதவி மசோதாவை அமெரிக்க செனட் சபை அங்கீகரித்துவிட்டதாம்; இந்த உதவித் தொகையைக் குறைப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் நிராகரிக்கப்பட்டனவாம்.

சீனாவுடன் வியாபாரம் செய்யும் நாடுகளுக்கு உதவி செய்யக்கூடாதென்று ஜோசப் மெக்கார்தி என்பவர் மீண்டும் தன்னுடைய பழைய எதிர்ப்பை புதுப்பிக்க முயன்றார்; ஆனால், பயனற்றுப் போய்விட்டது.

துர்காபூர் கோக்உலைக்களத் திட்டம்

ரூ. $5\frac{1}{2}$ கோடி செலவில் நிறைவேற்ற அனுமதி

கோக் உலைக்களத் திட்ட விசாரணைக் குழு குறித்துள்ளபடி, கோக் உலைகளமொன்றை ரூ. $5\frac{1}{2}$ கோடி செலவில், துர்காபூரில் நிர்மாணிக்க, மேற்கு வங்காள சர்க்கார் வகுத்துள்ள திட்டத்துக்கு, இந்திய சர்க்கார் அங்கீகாரம் அளித்திருக்கின்றனர்.

21 மைல் அகலமுள்ள வாய்க்கால்

கடக்க இந்தியர் முயற்சி

1,000 கினி - வெற்றிக் கோப்பை; 2,000 பவுன் பரிசளிப்பு!

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே 21 மைல் அகலமுள்ள இங்கிலீஷ் வாய்க்காலைக் கடக்க நடக்கும் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த திரு மேகர் சென்னும் கலந்து கொள்வார்; சமீபத்தில்தான் அவர் பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

ஆகஸ்டு மாதத்தில், இங்கிலீஷ் வாய்க்காலில் நீச்சல் போட்டி நடக்கிறது. போட்டியில் கலந்து கொள்கிறவர்கள் பிரான்சிலுள்ள கேப் கிரிஸ் நே என்னுமிடத்தில் நீரில் குதித்து, இங்கிலாந்திலுள்ள போக்ஸ்டனில் கரையேற வேண்டும். வெற்றி பெறுகிறவருக்கு ஆயிரம் கினி மதிப்புள்ள வெற்றிக் கோப்பையும், 2000 பவுன் பணமுடிப்பும் அளிக்கப்படும். போட்டியில் சுமார் 18 பேர் கலந்து கொள்ளக்கூடும். தனிப்பட்ட முறையில் 12 பேர்கள் இங்கிலீஷ் வாய்க்காலைத் தாண்ட முயலுவர்.

க்ஷயரோகத்திற்குப் புது மருந்து

'ஐசோனியாசிட்' என்ற புதிய மருந்து ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; க்ஷயரோகத்தைத் தடுப்பதற்கு இது சிறந்த மருந்தாகுமென கூறப்படுகிறது. பன்றிகளின் உடம்பிலேயே இம்மருந்து பற்றிய ஆராய்ச்சிகள் இதுவரை நடைபெற்று வந்துள்ளன; மேலும் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றனவாம்.

காகிதம் மிதித்துவிட்டால்...!

கண்ணில் ஒற்றிக்கொள்ளும் நாட்டின் கல்வி நிலை என்ன?

வடவருக்கு இங்கே வரவேற்பும் திராவிடருக்கு அங்கே அவமதிப்பும் ஏன்?

சாத்தூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

"வடநாட்டுத் தலைவர்கள் யார் இங்கே வந்தாலும் வரவேற்புக் கொடுப்பதில் நாம் தயங்குவதில்லை—அவ்வளவு மரியாதை செலுத்துகிறோம்; ஆனால், நம் தென்னாட்டுத் தலைவர்கள் வடநாடு சென்றால் அங்கே ஒரு நகரசபையில் கூட வரவேற்புக் கொடுப்பதில்லை. இந்த இழிநிலையில் நாம் இருக்கும்போது, வடவரின் பெயரால் வாசகசாலை, பூங்கா, திடல், சந்து ஆகியவற்றை நிறுவியவண்ணம் உள்ளோம்; ஆனால், நம் திராவிடத் தலைவர்களின் பெயரால் பம்பாயில் ஒரு சந்துகூடக் கிடையாது. இதையெல்லாம் கண்டு இதயம் எரிமலையாக மாறுகிறது."

"7¾ கோடி மக்களைக் கொண்ட திராவிடம் தனியாகப் பிரிந்து, சுய ஆட்சி சோஷலிச அமைப்பில், 'திராவிட நாடா'கத் திகழ வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம்; இப்படிச் சொல்லும் நம்மைப் பார்த்து சிலர், நாம், 'கடவுள் விரோதிகள், நாத்தீகர்கள்' என்று சொல்லுகிறார்கள்; ஆனால், நாம் உண்மையில் அப்படியல்ல; கடவுளை வேண்டாவகையில் கற்பிப்பதைத்தான் 'வேண்டாம்' என்கின்றோம்; 'அறிவே ஆண்டவன்—உண்மையே தெய்வம்—நேர்மையே கடவுள்,' என்று சொல்ல நாம் தயங்குவதில்லை. காகிதத்தைப் பாராமல் காலால் மிதித்துவிட்டால், கண்ணில் ஒத்திக் கொள்கிறோம்; அவ்வளவு அடக்கத்தோடு நடக்கிறோம்—ஆண்டவனிடத்தில்! ஆனால், இங்கே எழுத, படிக்கத் தெரிந்தவர்கள் **100-க்கு 17** பேராகவே உள்ளனர்; ஆகவே, இந்தக் கண்மூடப் பழக்கத்தால் நாம் கல்வியில் முன்னேற முடியாது—கால் கடுக்க கடவுளைச் சுற்றிக் கும்பிட்டுவந்தால் கல்வியில் முன்னேறிவிட முடியாது. பள்ளியில் பயில வேண்டும்—சீர்கெட்ட போக்கைப் பற்றிச் சிந்தித்து, சீர்திருத்தத்தைப் புரிந்து, சீரிய முறையில் வாழ வேண்டும். திராவிட நாடு பிரிந்து, தனியொரு சோஷலிச அமைப்பைக்கொண்ட நாடாகத் திகழ வேண்டும்,"

—இவ்வாறு, சாத்தூர் நகர தி. மு கழகச் சார்பில், இந்நகர் சுப்பிரமணிய நயினர் திடலில் நடைபெற்ற பாராட்டுப் பொதுக்கூட்டத்தில், பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:— "திராவிடம் வடவர் பிடியிலிருந்து பிரிந்தாலொழிய வளம் மிகுந்த வாழ்வு வாழ முடியாது. தென்னகத்தில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை நடத்த வேண்டுமென்றாலும், அதன் அனுமதிக்கு டில்லி ஏகாதிபத்தியத்தினிடம் காவடி எடுக்க வேண்டியிருக்கிறது. திராவிடத்தில் 'திண்டாட்ட நிலை'கள் வளர்ந்தவண்ணமுள்ளது; இங்கே வாழ வழி கிடையாது—தொழிற்சாலைகள் கிடையாது. ஆனால், பம்பாயிலும், அகமதாபாத்திலும் அளவுக்கு அடங்கா ஆலைகள் வளர்ந்தவண்ணமிருக்கின்றன."

நந்திகொண்டா அணைத் திட்டம்

தென்னாட்டில் மிகப் பெரியதாம்

கிருஷ்ணா நதியும், அதன் வடிநிலப் பகுதிகளும் பல மாநிலங்களால் பங்கு கொள்ளப்பட்டிருப்பவையாகும்; இந்தியாவில் அதிகமான பல மாநிலங்கள் பங்கு கோரும் நதி மார்க்கமும் இதுதான். இந்த நதியோ அல்லது தென் உபநதிகளோ அல்லது இதன் வடிகால் நிலப்பரப்புகளோ ஏதோ ஒன்று, பம்பாய், மைசூர், ஐதராபாத், ஆந்திரா ஆகிய நான்கு மாநிலங்களில் ஒன்றில் இருக்கின்றன அல்லது ஓடிவருகின்றன.

இந் நதி, பம்பாய் மாநிலத்தில், மேற்குத் தொடரில், ஒரு சிறு ஆலயத்திலுள்ள காமதேனு சிலையின் வாயிலிருந்து உதயமாகிறது. இந்தச் சிறு நீர்த்தாரையை இங்கே பார்ப்பவர்கள், 'இது இங்கேயே தடைப்படாமல், மாபெரும் கிருஷ்ணா நதியாக உருவெடுத்து, 775 மைல்கள் ஓடி, பின்னர் வங்காளக் குடாக்கடலில் விழும்,' என்று யூகிக்கவே முடியாது. ஆனால் முடிவில்லாது ஓடுவது போல் தோன்றும் இந்நதியின் இரு பக்கங்களிலும் பரந்துகிடக்கும் சுமார் 97,000 சதுர மைல் விஸ்தீரண வடிகால் பரப்பு தென்மேற்குப் பருவ மழையால் கிடைக்கும் தண்ணீரை கடப்பிரபா, மலப்பிரபா, துங்கபத்திரா, மூசி போன்ற பல உபநதிகளின் மூலம் கிருஷ்ணா நதியில் கொண்டு சேர்க்கின்றன.

இந்தியாவின் தென் பகுதியில் உள்ள நதிகளில் இரண்டாவது பெரிய நதியான கிருஷ்ணாவின் நீரோட்டத்தைத் தேக்கிப் பயன்படுத்தும் முதல் நடவடிக்கை ஆரம்பமாயிற்று — 1852—55-ம் ஆண்டுகளில் விஜயவாடாவுக்கு அருகில் ஆற்றில் ஒரு அணை கட்டப்பட்டது இந்த அணைக்கட்டின் தண்ணீர் மூலம் முதன் முதலில் 1890-ம் ஆண்டில், 50,000 ஏக்கராவில் சாகுபடி செய்யப்பட்டது; இப்பொழுது சாகுபடி பரப்பளவு, இதைப்போல் 22 மடங்கு அதிகரித்திருக்கிறது.

இப்போதைய திட்டத்தின்படி கர்னூலுக்கு அருகிலுள்ள சித்தேஸ்வரத்துக்குக் கீழ்ப்புறம் சுமார் 90 மைல்களுக்கப்பால் நந்திகொண்டாவுக்கு அருகில் கிருஷ்ணா நதிமீது ஒரு அணை கட்டப்படும்; இந்த நீர்த் தேக்கத்திலிருந்து இடது கால்வாய், வலது கால்வாய் என இரு கால்வாய்கள் வெட்டப்படும்.

அணை சுமார் 302 அடி உயரமிருக்கும்; இதன் நீளம் நதிக்குக் குறுக்கே 4,500 அடியிருக்கும்.

140 மைல் நீளமுள்ள வலது கரைக் கால்வாய், முதற் கட்டத்தில், வினாடிக்கு 14,000 கன அடி நீரோட்டமுள்ளதாக இருக்கும்; இடது கரைக் கால்வாய் 108 மைல் நீளமிருக்கும்.

திட்டத்தின் முதற் கட்டத்தை முடிப்பதற்கு—அதாவது அணையைக் கட்டி, இரு கால்வாய்களையும் வெட்டுவதற்கு, சுமார் ரூ. 75 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின் முதற் கட்டம் பூர்த்தி செய்யப்படும்போது ஆந்திர மாநிலத்தில் குண்டூர், கர்னூல், நெல்லூர் மாவட்டங்களிலும், ஐதராபாத் மாநிலத்தில் வாரங்கல், நலகொண்டா மாவட்டங்களிலும் பரவிக் கிடக்கும் சுமார் 20 லட்சம் ஏக்கரா நிலத்துக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும்.

செய்திச் சுருள்

★

கடையநல்லூர் திராவிட கைத்தறி நெசவாளர் சங்க அமைப்புக் கூட்டம்

30—5—55 இரவு 8 மணியளவில், தோழர் எஸ். எஸ். சாகுல் அமீது தலைமையில் மேற்படி அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் த. மு. சுல்தான் நெசவாளர்களின் தற்கால நிலை குறித்து விளக்கிப் பேசியபின், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: எஸ். எஸ். சாகுல் அமீது; துணைச் செயலாளர்: த. சிவலிங்கம்; பொருளாளர்: எம் எஸ். மருது; செயற்குழு உறுப்பினர்கள்: எம். ஏ. சுப்பையா, எஸ். கே. மருது, ச. வேலு, எஸ். எம். அப்துல் காதர், ஒ. மு. அப்துல் கனி, பீ. சாகுல் அமீது, கே. எஸ். எம். தாசீம், சொ இராமசாமி, மு. பெ. முகையதீன்.

* * *

திராவிட சாயப் பிடி தொழிலாளர் சங்க அமைப்புக் கூட்டம்

27—5—55 இரவு 8 மணியளவில், நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் சி. நடராசன் தலைமையில், மேற்படி அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். சாகுல் அமீது சங்க நோக்கம் பற்றியும், எதிர்கால ஆக்கவேலை குறித்தும் விளக்கிப் பேசியபின், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: பி. எஸ். சலாவுத்தீன்; துணைச் செயலாளர்: மா. கிருட்டிணன்; பொருளாளர்: மு க. நடராசன்; ஐந்து பேர் செயற் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாலமுத்து — நடராசன் நினைவுப் படிப்பகம்

மதுரை ஜூன் 4—

மேற்படி படிப்பகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா 22—5—55 மாலை 6 மணிக்கு, தோழர் பி. மாடசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் என். எஸ். இராசா கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசியபின், தோழர்கள் எஸ். முத்து, கே. எஸ். சந்தானம் ஆகியோர் கழகத்தின் குறிக்கோள், பணி இவை பற்றிப் பேசினர். இறுதியாக தோழியர் அருள்மொழி, திராவிடத் தாய்மார்களின் மூட நம்பிக்கை குறித்தும், சமுதாயத் துறையில் நாம் பெறவேண்டிய முன்னேற்றத்தைக் குறித்தும், வடநாட்டுப் பிடியிலிருந்து விலகித் தனித் திராவிடம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும் விரிவுரை ஆற்றினர்.

1954 செப்டம்பர் மாதம் வரை, புதிதாகப்பாசன வசதி அளிக்கப்பட்டுள்ள நிலங்களின் மொத்த விஸ்தீர்ணம் 6,13,202 ஏக்கராவாகும்.

கழகச் செய்திகள்

சென்னை 34-வது வட்ட தி. மு. கழகம்

28—5—55 இரவு 8 மணிக்கு நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழக உறுப்பினர் பரசுபாணி அவர்கள் இயற்கையெய்தியமைக்கு வருந்தியும், அவர்தம் குடும்பத்தினருக்கு அனுதாபமும் தெரிவித்துக் கொண்ட பின்னர், ஜூலை மாதத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு வரவேற்பு கொடுப்பதெனவும், கழக 3-வது ஆண்டு விழா நடத்துவதெனவும் முடிவுகள் செய்யப்பட்டதுடன், மற்றும் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 46-வது வட்ட தி. மு. கழகம்

28—5—55 இரவு 9 மணியளவில், கழகப் பணி மனையில். சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், தோழர் அ. பொ. அரசு தலைமையில் சென்னை மாவட்ட செயலாளருக்கு ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தி. கு. இராசாபாதர், இரா. அகமழகன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். தோழர் இளம்பரிதி பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

பம்பாய்—பாண்டுப் தி. மு. கழகம்

26—5—55 மாலை 7 மணிக்கு கழகச் செயற்குழுக் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, மாநில மாநாட்டுக்கு பாண்டுப் பகுதியில்: சுமார் ரூ. 100 வரை நன்கொடை திரட்டி தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதென்றும், கடந்த மூன்று செயற்குழுக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளாத தோழர்கள் எம். வி. மணி, எஸ். விசுவநாதன் ஆகியவர்களைச் செயற்குழுவிலிருந்து நீக்கிவிடுவதென்றும் முடிவுகள் செய்யப்பட்டது.

பம்பாம்—தாணா தி. மு. க.

26—5—55 மாலை 7 மணியளவில், தோழர் பி டி. வைதீக சங்கரன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், மாநில மாநாட்டிற்கு நிதி வசூலித்து அனுப்புவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பாபநாசம் தி. மு. கழகம்

28—5—55 மாலை 6 மணியளவில், கிழவீதியில் தோழர் ஏ. வி. பதி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் குடந்தை இராதா, நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியாக தோழர் க. அன்பழகன் அவர்கள் திராவிட நாட்டின் அரசியல்—பொருளாதார—சமுதாய விடுதலை பற்றி சொற்பொழிவாற்றினர்.

நிலக்கோட்டை தி. மு. க.

20—5—55 மாலை 6-30 மணியளவில், செயலாளர் ச சாமிநாதன் தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது அண்ணா அவர்களைப் பாராட்டியும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், மாநில மாநாட்டு நிதிக்காக பங்குத் தொகையை வசூல் செய்து கூடிய விரைவில் அனுப்பி வைப்பதென்றும் முடிவுகள் செய்யப்பட்டதுடன், இரு அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வண்டிப்பெரியார் தி.மு.க.

31—5—55 இரவு 8 மணிக்கு, கழகச் செயற்குழுக் கூட்டம் செயலாளர் கே. எம். அப்பாஸ் தலைமையில் நடைபெற்றபோது, பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றும, பாராட்டியும், வண்டிப்பெரியார் தி. மு. கழகக் கிளையை மதுரை மாவட்டத்தோடு இணைத்திருப்பதை ரத்துச்செய்யக் கோரி, மதுரை மாவட்டக் கமிட்டி கடந்த 8—5—55ல் முடிவு செய்திருப்பதை ரத்து செய்து, மேற்படி கிளை மதுரை மாவட்டத்தோடு தொடர்ந்து இருக்க அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொண்டும், மாநில மாநாட்டிற்குரிய கிளைக் கழக பங்குத் தொகையை அனுப்புவதென்றும் முடிவுகள் செய்யப்பட்டன.

செண்டங்காடு தி. மு. க.

31—5—55 மாலை 8 மணியளவில் செல்வம் நூல் நிலையத்தில், செயலாளர் அ. கனகசபை தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, அரசாங்கத்தின் பார்வையிலுள்ள கோயில்களின் தர்மகர்த்தா பதவிகளுக்கு, இனி தாழ்த்தப்பட்டவர்களையும் நியமிக்குமாறு கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குரும்பேரி தி. மு. கழகம்

27—5—55-ல், கழக அலுவலகத்தில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில், 10—4—55ல் ஆம்பூரில், தோழர் என். வி. நடராசன் அவர்களை தேர்தல் அதிகாரியாகக்கொண்டு நியமித்த வட ஆற்காடு மாவட்டக் குழுவை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எண்ணூர் தி. மு. கழகம்

26—5—55 இரவு நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், ஜூன் முடிவிற்குள் ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், இவ்வூரில் ஓர் பாடசாலையை நிறுவக்கோரியும், கழகத்திற்கு பொறுப்பாளரைத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

விளாம்பட்டி தி. மு. கழகம்

29—5—55-ல், கழகச் செயற் செயற் குழுக் கூட்டம் கழக அலுவலகத்தில், தோழர் இ. வ. மா. தங்கராசன் தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 25 அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுச் செயலாளருக்கு மண்பறை தி. மு. கழகத் தோழர்கள் உபசரிப்பு

1—6—55 மாலை சுமார் 5 மணியளவில் மண்பறை தி. மு. கழகத் தோழர்கள், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வயிரசெட்டிபாளையம் பொதுக் கூட்டத்திற்கு சென்ற பொழுது கரட்டாம்பட்டி வழியில் வரவேற்பு அளித்து, கைத்தறி துணி அணிவித்தனர்.

தேநீர் விருந்து

விளாம்பட்டியில், திரு சு. வேலுராசன், இவ்வாண்டில் எம். பி. பி. எச். தேறி, இவ்வூரில் முதல் டாக்டரானதையொட்டி அவருக்கு ஓர் தேநீர் விருந்தளிக்கப்பட்டது; வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது. திரு. எஸ். வி. சாமி தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்.

கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி!

பாக். கவர்னர்-ஜெனரல் பிரகடனம்

கிழக்கு வங்கத்தில் நடைபெற்று வரும் கவர்னர் ஆட்சியை உடனடியாக ரத்து செய்து பாகிஸ்தான் கவர்னர் - ஜெனரல் குலாம் முகமது பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதையொட்டி ஆட்சிப் பொறுப்பிலிருந்து வந்த கவர்னர் ஷஹாபுத்தீன் தமது பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டதாகவும், அவருக்குப் பதிலாகத் தற்போது டாக்கா உயர் நீதிமன்றப் பிரதம நீதிபதி அமிருதீன் ஆமத், இடைக்கால கவர்னராக நியமனம் பெறுவார் என்றும் கூறப்படுகிறது.

தம்மைக் கலந்தாலோசிக்காமல் கிழக்கு வங்கக் கவர்னர் ஆட்சி முடிவுறும் என்று பாகிஸ்தான் பிரதமர் முகமதலி அறிவித்ததை ஆட்சேபிக்கும் முறையிலேயே கிழக்கு வங்கக் கவர்னர் ஷஹாபுதீன் இராஜிநாமாச் செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

பிரதமர் முகம்மது அலி, கவர்னர் - ஜெனரலின் பிரகடனம் லண்டனிலிருந்து கிடைத்ததும் பஸ்லுல் ஹக்கை சந்தித்து மந்திரி சபை அமைப்பது பற்றி பேசியதாகவும், எற்கனவே அறிவிக்கப்பட்டபடி பஸ்லுல் ஹக்கின் பிரதிநிதி மந்திரி சபை அமைப்பார் எனவும், அவர் பெயர் தமக்கு அறிவிக்கப்பட்டு விட்டபோதிலும் தாம் அதை இப்போது வெளியிடப் போவதில்லை என முகம்மதுஅலி கூறியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

மௌலானா பாஷானியின் தலைமையில் உள்ள சுஹ்ரவர்த்தியின் அவாமி லீக் எதிர்க்கட்சியாக இனி இயங்கும் என்றும், முஸ்லீம் லீக் கட்சி, பஸ்லுல் ஹக்கை ஆதரிக்குமெனவும் கூறப்படுகிறது.

நேருவின் ரஷ்ய பயணம்

பம்பாய், ஜூன் 5 —

"இந்திய மக்களின் ஆசியையும் நல்லெண்ணத்தையும் என்னுடன் கொண்டு செல்கிறேன்," என்று, சோவியத் ரஷ்யாவிற்கு தன் வாழ்நாளில் இரண்டாம் முறையாகச் செல்லும் இந்தியப் பிரதமர் பண்டித நேரு, தன் பயணத் துவக்கத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

அவருடன், அவரது மகள் இந்திரா நேருவும், வெளிநாட்டிலாகா பொதுச் செயலாளர் என் ஆர். பிள்ளை, மற்றும் சிலரும் செல்கின்றனர்.

SANKARAN PROGRESSIVE TUTORIALS TIRUCHI

S.P.T.

SANKARAN PROGRESSIVE TUTORIALS

★ COLLEGE & HIGH SCHOOL ★

KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD

TEPPAKULAM P.O., TIRUCHIRAPALLI.

RE-OPENS: 10th JUNE 1955

S. S. L. C., INTER., B. A., etc.,

(All Parts & Groups)

★

The Greatest Living Poet

BHARTHI DASAN

will Teach you Tamil!

★

Mrs. JUDITH LOUIS, B.A. (HONS. Vice-Principal.

N. J. DEVADOSS, M.A., Principal.

விளம்பரம் கண்டு சீறும்....

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

—அந்த நாட்களில் சர் பி. டி. தியாகராயரும், டாக்டர் நாயரும், பெரியார் இராமசாமியும், நமது அண்ணாவும் தந்த பிச்சை என்பதை நிதி மந்திரி சுப்பிரமணியம் உணர வேண்டும் ;

"ஒரு தியாகராயர் இல்லாதிருந்தால் வட சென்னையில் ஒரு கல்லூரி இருக்குமென கனவுகூட காண முடியாதே! 'எல்லாம் அவர்களுக்கே,' என்ற நிலையை மாற்ற பார்ப்பனரல்லாத தலைவர்கள் செய்த அரும் பணியின் விளைவாகத்தானே இன்று, பார்ப்பனரல்லாத மக்கள், ஓரளவு உயர்ந்த பதவிகளையும், பட்டங்களையும் பெற்றிருக்க முடிகிறது. இந்த உண்மையை, பார்ப்பனரல்லாதாரின் எழுச்சிக்கு, நீதிக் கட்சியும், திராவிடர் இயக்கமும் செய்திருக்கிற அரும் பணியை நியாய உள்ளம் கொண்ட எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்—மனதாரப் பாராட்டியிருக்கிறார்கள் ; ஆனால், நிதி மந்திரியாருக்கு மட்டும் அந்த உண்மை தெரியவில்லைபோலும்,"

—என்று, சென்னை-வண்ணையம்பதியில், 4—5—55 அன்று நடைபெற்ற 3-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் என். வி. நடராசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

★

நிகழ்ச்சி விவரம்

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், வண்ணை கல்லறை மைதானத்தில், 4—6—55 மாலை 6-30 மணியளவில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் இரா. சண்முகம் முகம்மது அமீத் ஆகியோர் கழகப் பண் பாடினர்.

தோழர் த. சேதுராசன் தலைமை தாங்கினார்.

முதலாவதாக தோழர் என். வி. நடராசன் பேசினார்.

அடுத்து தோழர் கண்ணதாசன் சிறிது நேரம் பேசியதும், 24—5—55 அன்று கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட சொற்பொழிவுகள் ஒலிபரப்பப் பட்டன.

அண்ணா அவர்கள் சொற்பொழிவு ஒலிபரப்பப்படுகையில், "இதுவேண்டாம் எங்களுக்கு; இது அரும்பு மீசைக்காரர்கள் நிறைந்த கழகம் ; எங்களுக்கு வயோதிகர் கழகம்தான் வேண்டும் என்றால், தந்தை வீடு இருக்கிறது; அங்கு செல்லுங்கள்," என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்ட பகுதியைக் கேட்ட கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான திராவிட மக்கள், அண்ணா அவர்களின் சொற்பொழிவைத் திரித்து வெளியிட்ட இதழின் இழிச் செயலை தங்களின் ஆரவாரப் போரொலி மூலம் கண்டித்தனர்.

அடுத்துத் தோழர் சி. பி சிற்றரசு அவர்கள் உணர்ச்சி மிக்கதோர் சொற்பொழிவாற்றினார்.

அதற்கு முன்பாக, தோழர் கண்ணதாசன், 3-வது வட்ட தி. மு. கழக தோழர் வன்னியப்பன்—தோழியர் மரியம்மாள் திருமண விழாவை பொதுக்கூட்ட மேடையிலேயே நடத்திவைத்தார்.

கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான தொகை ரூ. 43—1—0 மாநில மாநாட்டு நிதிக்காக, 3-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், மாவட்டப் பொருளாளர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

★

தொடர்ந்து என் வி.என். கூறியதாவது :—

"இன்றுகூட சென்னை சர்க்கார், தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மக்களுக்கு விளக்குவதற்காக, அரிசன நல இலாகா மூலம் ஒரு விளம்பரம் தயாரித்திருக்கிறார்கள் ; அந்த விளம்பரத்தில், ஒரு வைதிகர் உச்சிக்குடுமியும், பூநூலும், பஞ்சகச்சமும் கொண்ட கோலத்தில் வரையப்பட்டு, எதிரே வரும் ஒரு தாழ்த்தப்பட்ட தோழரை 'அருகே வராதே! எட்டி நில்,' என்று கூறியதாகவும், கீழே, அம்மாதிரி தீண்டாமைக் குற்றம் புரிந்ததற்காக அவருக்கு தண்டனை தரப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருப்பது போலவும் வரையப்பட்டுள்ளது. இது விளம்பரப் படம்-இந்தப் படத்தைக் கண்டு, 'இந்து' இதழ் சீறியிருக்கிறது—வகுப்புவாத இயக்கத்தவர்போல சர்க்கார் நடந்துகொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கிறது

"நான் கேட்கிறேன்—எத்தனை ஆண்டாண்டுக் காலமாக, இந்த 'இந்து'வின் பரம்பரையினர், பார்ப்பனரல்லாத மக்களை—குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களை, மனிதர்களாகவே மதிக்க மறுத்து, அவமதித்து வந்திருக்கின்றனர் ?

"பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த பள்ளிக்கூடத்துப் பையன்—12 வயதுடையவன், 50 அல்லது 60 வயது வந்தவரானாலும்—பார்ப்பனரல்லாத வகுப்பைச் சேர்ந்தவரானால், 'ஏ. செட்டி! எங்கு போய் வருகிறாய்? ஏ, முதலி! இந்தப் பொருள் என்ன விலை?' என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை 'அடே, போடா, வாடா' என்றும் அழைத்து வந்திருக்கின்றனர் ; இன்று தானே—பார்ப்பனரல்லாத மக்கள் விழித்துக் கொண்ட பிறகு தானே—'என்ன செட்டியார் வாள்! என்ன முதலியார்வாள்!'—என்று பேசுகிறார்கள்.

"அந்த நாட்களிலெல்லாம், எங்கள் மனம் எத்தனை புண்பட்டிருக்கும்—வேதனைப்பட்டிருக்கும் என்பதை இன்று சீறி எழுகின்ற 'இந்து' பத்திரிகை உணர வேண்டாமா ?

எல்லோரும் ஒன்றுதான் என்று இன்று எழுதுகிற 'இந்து'வுக்கு இந்த எண்ணம், இன்றைக்கு 40 அல்லது 50 ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்தால், இன்று இந்த விளைவுகள் எல்லாம் ஏற்படாதே! ஒரு காலத்தில் நாம் சுட்டிக்காட்டிய உண்மைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து வந்ததின் விளைவு இன்று சீறி எழ வேண்டியிருக்கிறது.

"காலஞ்சென்ற சௌந்திர பாண்டியனார் தலைமையில் செங்கற்பட்டில் 1928-ல் நடைபெற்ற மாநாட்டில் 'தீண்டாமையை அனுசரிப்பது குற்றம் என சர்க்கார் சட்டமியற்ற வேண்டும்,' என்று இன்றைய திராவிடர் இயக்கத்தவர் அன்று கோரியபோது, எத்தனை பேர் எதிர்த்தார்கள் ? பார்ப்பனர்களும், சாதி வெறியர்களும், வைதிகப் பழைமை எண்ணங்கொண்டோரும் எதிர்த்தனர்—சர்க்கார் கூட முறைத்துப் பார்த்தது ; ஆனால், இன்று என்ன வாயிற்று ? அன்று நாம் சொன்னதை இன்று சர்க்கார் செய்கின்றனர். தீண்டாமை அனுசரிப்பதை சட்டப்படி குற்றம் ஆக்கியுள்ளனர்.

"இதுபோலத்தான் அன்று நாம் இந்தியை எதிர்த்தோம்—போரிட்டோம்—தாளமுத்து, நடராசனை பலி கொடுத்தோம் ; ஆனால், ஆச்சாரியார் இந்தி வேண்டுமென்று கூறி கட்டாய பாடமாகப் புகுத்தினர் ; ஆனால், இன்று அவரே எதிர்க்கிறார். இப்படியேதான் வடநாடு—தென்னாட்டுப் பிரச்சினைகளும் ; அதனை அன்று உணர மறுத்தோர் இன்று, சிறிது சிறிதாக உணர்ந்து வருகின்றனர் — என்றாவது ஒருநாள் உணர்வார்கள்—நம் லட்சியம் ஈடேறும் என்பது நிச்சயம்," என்று கூறி முடித்தார்.

★

சி. பி. சிற்றரசு

"நடந்த நிகழ்ச்சிகளை கூட்டாமல் குறைக்காமல், ஒருவர் பேசியதை திரிக்காமல் ஒளிக்காமல் வெளியிட வேண்டுமென்பதையே உலகத்தில் உள்ள பத்திரிகைகள் எல்லாம், நியாயமான முறை என ஒப்புக்கொண்டிருக்கின்றன ; அந்த நியாயமான முறையினின்றும் வழுவாதிருப்பதைப் பெரும் கடமையாகக்கொண்டு, பத்திரிகைகள் வெளிக் கொணரப்படுகின்றன; ஆனால், இந்த நாட்டில்தான்—குறிப்பாக தமிழகத்தில் உலகத்தில் வேறெங்கும் காண முடியாத வகையில், இந்த நடக்காத சம்பவங்கள், பேசாத சொற்பொழிவுகள் வெளிவருகின்ற கீழ்த்தரமான பத்திரிகைகள் இருக்கின்றன.

"ஒருவர் பேசியதை வெளியிடாமலிருப்பது குற்றமல்ல ; அது, அந்த அந்த பத்திரிகையின் விருப்பத்தைப் பொறுத்தது ; ஆனால், பேசியதாக—பேசாத ஒன்றையும், பேசியவற்றைத் திரித்தும் வெளியிடும் இழிசெயல் புரியும் பத்திரிகைகள் இங்கு இருக்கின்றன; அத்தகைய பத்திரிகைகளைப் பற்றி பொது மக்கள் கண்காணிப்புடன் இருக்க வேண்டும்."

என்று, குறிப்பிட்ட தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், தொடர்ந்து பேசுகையில், இந்த நாட்டு மக்களின் மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்தும், பொருளாதார அரசியல் துறைகளில் திராவிடர்கள் பெறவேண்டிய விடுதலை குறித்தும், விரிவான விளக்கம் தந்தார்.

தி. மு. க. பொதுச்செயலாளருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புகைவண்டி நிலயத்திலிருந்து நகர் வடபாகத்திலுள்ள பூபால் ராயர்புரம் சென்று பொதுச் செயலாளர் அவர்கள் கழகக் கொடியேற்றினார். மாலை 4 மணிக்கு தி. மு. க. தொண்டர்கள் பொதுச் செயலாளருக்கு தேனீர் விருந்தளித்தனர். தேனீர் விருந்திலும் கழக ஊழியர்கள் கூட்டத்திலும் 600 தோழர்கள் கலந்துகொண்டனர்.

ஊழியர் கூட்டத்தில், கழகத் தோழர்களின் கடமை பற்றியும், நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

பின்பு, நகர தி. மு. க. செயலாளர் எம். எஸ். சிவசாமி, ஜூலை முதல் வாரத்தில் அண்ணா அவர்கள் தூத்துக்குடி வர இருப்பதாகவும், அண்ணாவின் வருகை—கழகத்தின் சொந்தக் கட்டிடத்தைத் திறந்து வைக்கும் வருகையாக இருக்க வேண்டுமாகையால் தொண்டர்கள் அதற்கான உறுதிமொழி தர வேண்டுமென்று பேசினார் ; 600 தோழர்களும், அதற்கான உறுதிமொழி தந்தனர்.

இறுதியாக மாவட்டச் செயலாளர் கே. வி. கே. சாமி நன்றி கூறியபின் ஊழியர்கூட்டம் முடிந்தது.

மாலை 5 மணிக்கு, நகர் மேல் பாகத்திலுள்ள போல்நாய்க்கன் பேட்டை தி.மு. கழக உட்கிளையை பதினாயிரம் மக்கள் மத்தியில், பொதுச் செயலாளர் அவர்கள் நீண்டதோர் சொற்பெருக்காற்றி துவக்கி வைத்தார்.

ஊர்வலம்

துவக்க விழா முடிவுற்றதும், ஆயிரத்துக்கும் கூடுதலான சைக்கிள் தொண்டர்கள் அணிவகுத்து முன் செல்ல, அதற்குப் பின்னால் வாத்தியங்கள் இன்னிசை பரப்ப, முப்பதினாயிரம் மக்கள், இரண்டு மைல் நீளத்தில் அணிவகுத்து நிற்க, இரண்டு குதிரைகள் பூட்டிய சாரட்டில் 21 முக்கிய வீதிகளிலும் பொதுச் செயலாளர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

ஊர்வலத்தின் எழில் தன்மையைக் கண்ட பொதுச் செயலாளர் தன்னுடைய 15 ஆண்டு பொது வாழ்வில் எந்த ஊரிலும்—எந்த அரசியல் கட்சியும் இவ்வளவு பெரிய ஊர்வலத்தை நடத்தத்தாம் பார்த்ததில்லையென்று கூறினார்.

பொதுக்கூட்டம்

ஊர்வலம் இரவு 8½ மணிக்கு, வ. உ. சி. திடல் மைதானத்தை அடைந்தது.

பொதுக்கூட்ட மைதானம் எண்கோண நட்சத்திரவடிவில் நூற்றுக்கணக்கான மெர்குரி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

13 அடி உயரமுள்ள மேடையில் நின்றுபார்த்தால் கூட்டத்தின் கடைசி பாகம் தெரியாத அளவுக்கு 'மக்கள் சமுத்திரம்' அங்கு குழுமியிருந்தது.

தோழர்கள் கே. வி. கே. சாமி, ஏ. எம். சாமி ஆகியவர்கள் வரவேற்றுப் பேசிய பின், தோழர் எம் எஸ் சிவசாமி தலைமையுரை ஆற்றிய பின், ஆயிரமாயிரம் மக்களின் நீண்ட கைதட்டலுக்கிடையே பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இரண்டு மணி நேரம் உணர்ச்சி மிக்க கருத்துரை வழங்கினார்.

பொதுக்கூட்டத்தில் மாநில மாநாட்டின் நிதிக்காக நெல்லை மாவட்டத்தின் சார்பில் முதல் பங்காக ரூ. 475/ கொண்ட பணமுடிப்பை மாவட்டச் செயலாளர் கே. வி. கே. சாமி பொதுச்செயலாளரிடம் கொடுத்து பாக்கி ரூ. 2525-ம் அண்ணா தூத்துக்குடி வருவதற்குள் கொடுப்பதாக உறுதி கூறினார்

மாநில மாநாட்டு நிதிக்கு, தி. மு. க மாதர் கழகத்தினர் ரூ. 9-ம், தி. மு. க மாணவர் கழகத்தினர் 101 காலணா கொண்ட பணமுடிப்பும், புதுமார்க்கெட் தி. மு. க. வர்த்தக தொழிலாளர்கள் 101 அணா கொண்ட பண முடிப்பும், ஆாவி மில் லிசோனா தொழிலாளர்கள் ரூ 7-ம், டுவிபுரம் தி. மு. க. கலைக் கழகத்தார் ரூ 1-ம் பொதுச் செயலாளரிடம் அளித்தனர்.

பொதுச் செயலாளர் அவர்களுக்கு, ரயில் நிலையத்தில் தரப்பட்ட வரவேற்பிலும், ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலுமாக, நூற்றுக்கணக்கான மன்றங்கள், கழகங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப் பெற்றன. (இவைகள் விவரம் நாளை வெளிவரும்.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராணய செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ,